நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**டெல்லி- வெங்காய விலை மேலும் உயரும் அபாயம்: வெங்காய விற்பனையாளர்கள் வேலைநிறுத்தம்**

First Published : 12 Jan 2011 09:00:38 AM IST

புதுதில்லி, ஜன.12: தங்கள் வீடு, அலுவலகங்களில் வருமானவரித் துறையினர் சோதனை நடத்தியதைக் கண்டித்து வெங்காய விற்பனையாளர்கள் இன்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் வெங்காய விலை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

புதுதில்லி ஆசாத்பூர் வெங்காய மண்டியில், வெங்காய விற்பனையாளர்கள் இன்று முதல் வேலைநிறுத்தம் மேற்கொள்கின்றனர். அண்மையில் வெங்காய விற்பனையாளர்களின் வீடுகள், அலுவலகங்களில் வருமானவரித் துறையினர் சோதனை மேற்கொண்டது தங்கள் மனதைப் புண்படுத்துவதாகத் தெரிவித்துள்ள அவர்கள், இந்தச் செயலைக் கண்டித்து வேலைநிறுத்தம் மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், வேலை நிறுத்தம் செய்தால் அவர்கள் மீது அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின் கீழ் (எஸ்மா) நடவடிக்கை எடுக்கப்படும் என தில்லி அரசு கண்டிப்புடன் கூறியுள்ளது. அரசின் மிரட்டலுக்கு செவிசாய்க்கப் போவதில்லை என்று விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கெனவே வெங்காயம் நாடு முழுவதும் ஒவ்வொரு பகுதியில் ஒவ்வொரு விலையில் விற்கப்பட்டு வருகிறது. சராசரியாக கிலோ ரூ.55-60 என்ற நிலையில் விற்கப்பட்டு வரும் வெங்காய விலை, இந்த வேலை நிறுத்தத்தால் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. இருப்பினும் அரசு கூட்டுறவு சங்கங்கள் மூலம் கூடுதலாக விற்பனை மையங்களைத் திறந்து கிலோ ரூ.35 என்ற விலையில் மக்களுக்குக் கிடைக்கும் வண்ணம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

**வேளாண் அலுவலகம் முன் விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

First Published : 11 Jan 2011 10:39:40 AM IST

பண்ருட்டி, ஜன. 10: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்-அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் கோவிந்தா போடும் ஆர்ப்பாட்டம் பண்ருட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்மை அலுவலகம் எதிரில் திங்கள்கிழமை நடந்தது.

தொடர் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் பாரபட்சம்-முறைகேடு ஊழல், வேளாண்துறை-தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் ஆளும் கட்சியாளர்களுக்கு சாதகமான போக்கு முதலியவற்றை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

விவசாய சங்க வட்டச் செயலர் கே.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் துணைத் தலைவர் கே.கிருஷ்ணமூர்த்தி, விவசாயத் தொழிலாளர் சங்க வட்டச் செயலர் ஏ.லாரன்ஸ், துணைத் தலைவர்கள் என்.அஞ்சாபுலி, என்.தமிழரசன், துணைச் செயலர் ஏ.பன்னீர் முன்னிலை வகித்தனர்.

விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் எஸ்.துரைராஜ், விவசாய சங்க மாவட்டத் தலைவர் எம்.நாராயணன் கண்டன உரை நிகழ்த்தினர்.

விவசாய சங்க வட்டச் செயலர் கே.தனபால், பொருளர் ஆர்.மணிவண்ணன், விவசாயத் தொழிலாளர் சங்க வட்டச் செயலர் எஸ்.கே.ஏழுமலை, பொருளர் கே.தணிகாசலம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் முற்றுகைப் போராட்டம்**

First Published : 11 Jan 2011 10:39:55 AM IST

சிதம்பரம், ஜன. 10: பாரபட்சமின்றி வெள்ள நிவாரணம் உடனே வழங்கக் கோரி தமிழக விவசாயிகள் சங்கம், கான்சாகிப் வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் ஆகியன இணைந்து சிதம்பரம் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டத்தை திங்கள்கிழமை நடத்தியது.

முன்னதாக காந்தி சிலையிலிருந்து கண்டன ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக கோட்டாட்சியர் அலுவலகத்தை அடைந்தது.கான்சாகீப் வாய்க்கால் பாசன விவசாய சங்கத் தலைவர் கே.கண்ணன் தலைமை வகித்தார்.

விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் எம்.நாராயணன், பி.கற்பனைச்செல்வம், ஜி.ஆர்.ரவிச்சந்திரன், டி.ராஜாராமன், ஆர்.இளம்பாரதி, பி.தண்டபாணி, பி.ஆர்.விஜயகுமார், பி.சிவலிங்கம் உள்ளிட்டோர் பேசினர். உமாபதிசிவம் நன்றி கூறினார்.

**நெல் விவசாயிகளுக்கு செஞ்சி விற்பனைக் குழு அறிவுரை**

First Published : 11 Jan 2011 10:38:00 AM IST

செஞ்சி, ஜன.10: செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஒரே நாளில் 13 ஆயிரம் நெல் மூட்டைகள் குவிந்ததால் நிர்வாக சிக்கல் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இதை கருத்தில் கொண்டு 2

நாளுக்கு விவசாயிகள் யாரும் நெல் மூட்டைகளை கமிட்டிக்கு எடுத்து வர வேண்டாம் என்று கமிட்டி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தற்போது செஞ்சி ஒழுங்கு முறை விற்பணை கூடத்தில் நெல் வரத்து மிக அதிக அளவில் வரத்தொடங்கியுள்ளது. திங்கள்கிழமை 7 ஆயிரம் மூட்டைகளை மட்டுமே கொள்முதல் செய்ய முடிந்தது. மீதி உள்ள 6 ஆயிரம் மூட்டைகளை செவ்வாய்க்கிழமை கொள்முதல் செய்யப்படும் என்று விற்பனைகூட கண்காணிப்பாளர் கண்ணன்(பொறுப்பு) தெரிவித்தார்.

பிப்ரவரி மாதத்திற்குள் தீர்வு காணப்படும்

செங்கல்பட்டு, ஜன 10: மாமல்லபுரத்தில் தொல்லியல் துறையின் புதிய சட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து குறைகளை கேட்டறிந்த மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி வரும் பிப்ரவரி மாதத்திற்குள் இப்பிரச்சனைக்கு உரிய தீர்வு காணப்படும் என உறுதி அளித்துள்ளார்.

கடந்த 2010ம் ஆண்டு தொல்லியல் துறை சட்டத் திருத்தத்தின் படி புராதான சின்னங்கள் முதுமக்கள் தாழிகள் உள்ள இடங்களிலிருந்து 200 மீட்டர் தூரத்திற்கு புதிய கட்டிடங்களை மாற்றி அமைக்கக்கூடாது, மின் இனைப்பு வழங்கக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாமல்லபுரம், திருப்போரூர், செங்கல்பட்டு, பழைய ஜமீன் பல்லாவரம் உள்ளிட்ட பகுதிகள் பாதிக்கப்பட்டு எந்த ஒருசெயலும் செய்யமுடியாமல் மக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். ஆகவே இந்த சட்டத்திருத்தத்தை திரும்ப பெறவேண்டும் என்று மாமல்லபுரம் பொதுமக்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வந்துள்ளனர்.

இந்நிலையில் எடுக்கவேண்டிய முடிவுகள் குறித்து மத்திய கலாசார இணை அமைச்சர் நாராயணசாமி மாமல்லபுரத்தில் தொல்லியல் துறையினால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

முன்னதாக இந்த சட்டத்தால் பாதிக்கப்பட்ட மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக்கோயில், ஐந்து ரதம், அர்சுணன் தபசு, பேருந்து நிலைய மண்டபம், முகுந்தநாயனார் கோயில் ஆகிய இடங்களை மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், எம்.பி. விஸ்வநாதன், எம்.எல்.ஏ., திருக்கச்சூர் ஆறுமுகம், மாவட்ட வருவாய் அதிகாரி சிவராசு, வருவாய் கோட்ட அலுவலர் லெனின் ஜேக்கப், பேரூராட்சி செயல் அலுவலர் ரவிசந்தர் உள்ளிட்டோர் பார்வையிட்டனர்.

பின்னர் நடைபெற்ற குறைக்கேட்கும் கூட்டத்தில் காங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினர் மல்லை ஜனார்த்தனம் வரவேற்று பேசினார், மாமல்லபுரம் திமுக செயலாளர் விஸ்வநாதன் மற்றும் பல்லாவரம், திருப்போரூர் பகுதியைச் சேர்ந்தவர்கள் இச்சட்டத்தால் பாதிப்புகள் குறித்து விரிவாக பேசினர்.

அமைச்சர் தா.மோ. அன்பரசன் பேசுகையில், ""காஞ்சி மாவட்டத்தில் 178 இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் மக்கள் வாழ்வுரிமையை இழந்து நிற்கின்றனர். இச்சட்டத்தினால்

தமிழக அரசிற்குத்தான் அவபெயர்கள் வந்து சேரும். ஆகையால் இச்சட்டத்தை தளர்த்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்" எனக் கூறினார்.

அமைச்சர் நாராயணசாமி பேசுகையில், ""இந்தியா முழுவதும் 1992-ல் தொல்லியல் துறையால் 3675 இடங்கள் புராதான சின்னங்கள் கண்டறியப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. தில்லியில் உள்ள குதுப்மினார் அருகே அனுமதி இன்றி கட்டப்பட்ட கட்டடம் மீது தொல்லியல் துறை நடவடிக்கை மேற்கொண்டதை அடுத்து கட்டட உரிமையாளர்கள் உச்சநீதிமன்றம் சென்று தடைஉத்தரவு பெற்றனர். இதனையடுத்து 2010-ல் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி, 101 முதல் 300 மீட்டர் வரை தொல்லியல் துறை அனுமதி பெற்று புதிய கட்டடம் கட்டவும் மின் இனணைப்பு பெறவும் அனுமதி வழங்கப்படும் எனவும் 100 மீட்டருக்குள் உள்ள கட்டடம் புதுப்பிக்கக்கூட அனுமதி பெற்று புதுப்பிக்கவேண்டும்.

மேலும் மாமல்லபுரம் பகுதியில் பட்டா வழங்கக் கூடாது என்ற தடை விதிக்கவில்லை.

எனினும், இப்பிரச்சனைக்கு பிப்ரவரி மாதம் தீர்வு கண்டு ஏப்ரல் மாதத்திற்குள் நல்லதொரு முடிவு மாமல்லபுரம் மக்களுக்கு கிடைக்கும்" என உறுதி அளித்து பேசினார்.

**மரபணு விதை மாற்றுச் சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கம்**

First Published : 11 Jan 2011 10:46:08 AM IST

புதுச்சேரி, ஜன.10: புதுச்சேரி பாஜக விவசாய அணி சார்பில் மரபணு விதை மாற்றுச் சட்டம்-2004 குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் விவசாயிகள் கருத்து கேட்பு கூட்டம் நைனார்மண்டபத்தில் திங்கள்கிழமை நடந்தது.

பாரத கிஸ0ன் மோர்சா நிர்வாகிகள் சுனாக்கா ராவ், மாஸ்டர் மாதன் (முன்னாள் மக்களவை உறுப்பினர்) ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். பாஜக புதுச்சேரி தலைவர் எஸ்.பி.கே.தாமோதர், பொதுச் செயலர் ஐ.அன்புச் செல்வன், விவசாய அணித் தலைவர் ஆர்.எஸ்.இளங்கோவன், செயலர் ஜி.பத்மநாபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கால்நடை பராமரிப்புத் துறைக்கு மருத்துவ ஆய்வுக்கூட வாகனம் அளிப்பு**

First Published : 11 Jan 2011 12:09:30 PM IST

கரூர், ஜன.10: கரூரில் நடைபெற்று வரும் கண்காட்சியின்போது கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு நடமாடும் கால்நடை மருத்துவ ஆய்வுக்கூட வாகனம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.

கரூர் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்புத் துறை சார்பில் பல்துறை பணி விளக்கக் கண்காட்சி முகாம் கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் நுகர்வோர் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில் மாவட்ட உணவுப் பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் வி. நாகஜோதி, நுகர்வோர் பாதுகாப்பு இயக்க மாநிலத் தலைவர் சா. குப்புசாமி, மாவட்ட ஆலோசகர் கே. முருகானந்தம், நகரத் தலைவர் ஆர். கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

காந்தி கிராம பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கவிஞர் சிவா தலைமை வகித்தார். ஸ்ரீசாரதா நிகேதன் மகளிர் அறிவியல் கல்லூரிப் பேராசிரியைகள் சு. சசிகலா, சி. சங்கீதா, மாணவிகள் ப. கோமதி, ரா.சரண்யா ஆகியோர் பேசினர். கிருஷ்ணராயபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் விழிப்புணர்வு ஓரங்க நாடகம், வில்லுப்பாட்டு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தொடர்ந்து, இந்திய அரசின் 2009-10 ஆம் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்திற்கு ரூ. 11 லட்சத்தில் நடமாடும் கால்நடை மருத்துவ ஆய்வுக் கூடத்தை ஆட்சியர் ஜெ. உமாமகேஸ்வரி வழங்கினார்.

மேலும், ரூ. 1 லட்சத்தில் சிறிய குளிர்ச்சாதனப் பெட்டி, நுண்ணோக்கி மற்றும் இதர உபகரணங்களும் வழங்கப்பட்டன. இவற்றை கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர் ப. சக்திவேல் பெற்றுக் கொண்டார்.

செவ்வாய்கிழமை மாலை 5 மணிக்கு காவல் துறை சார்பில் காவல் துறையில் பொதுமக்களின் பங்களிப்பு குறித்த கருத்தரங்கம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சி. மகேஸ்வரி தலைமையில் நடைபெறுகிறது.

தொடர்ந்து காவல் துறை மோப்பநாய்களின் சாகச நிகழ்ச்சியும், எஸ். கிருஷ்ணராஜ் குழுவினரின் சிலம்ப நிகழ்ச்சியும் நடைபெறுகின்றன.

**கரும்பு விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 11 Jan 2011 12:04:44 PM IST

சிவகங்கை, ஜன. 10: சிவகங்கை வட்டாரத்தில் நீர், நில வளத் திட்டத்தின் கீழ் கோட்டக்கரையறு உப வடிநிலப் பகுதியான சக்கந்தி கிராமத்தில் கரும்பு விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் வி.தங்கச்சாமி பாண்டியன் ஆகியோர் வழிகாட்டுதலின்பேரில் நடைபெற்ற இப்பயிற்சிக்கு, சக்கந்தி ஊராட்சி மன்றத் தலைவர் ஆர்.முத்துமணி தலைமை தாங்கினார்.

சிவகங்கை மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.ராஜா வரவேற்றார்.
சக்தி சர்க்கரை ஆலையின் கரும்பு அலுவலர் வீரையா, தோட்டக்கலை உதவி அலுவலர் நாகராஜன் ஆகியோர் தொழில்நுட்ப உரை நிகழ்த்தினர்.
சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க வழங்கப்படும் உதவிகள் குறித்து ஜெயின் இர்ரிகேஷன்ஸ் நிறுவன உதவிப் பொறியாளர் மல்லர் விளக்கினார்.
வேளாண்மைத் துறை மூலம் வழங்கபட்டு வரும் மானியங்கள் குறித்து வேளாண்மை அலுவலர் என்.முத்துமீனா எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் எம்.முத்துமணி நன்றி கூறினார். சக்கந்தி மற்றும் சுற்று வட்டார விவசாயிகள் 50 பேர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

தினமலர்

**அரசு தோட்டக்கலை பண்ணையில் பழச்செடிகள் மானிய விலையில் விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,02:57 IST

காஞ்சிபுரம் : விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலை பண்ணையில் உயர் தொழில்நுட்ப திட்டத்தின் கீழ் மல்லி, கறிவேப்பிலை, கொய்யா செடிகள் லட்கணக்கில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் மானிய விலையில் செடிகளை வாங்கி பயன் பெறலாம் என, தோட்டக்கலை துறை துணை இயக்குனர் கோமதி தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் கூறியதாவது: விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் உயர் தொழில்நுட்ப திட்டத்தின் கீழ் பூ, பழச்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் செங்காம் கறிவேப்பிலை, ராமேஸ்வரம் மல்லி செடிகள் ஒரு லட்சத்திற்கு மேல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஒரு செடி ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

ராமேஸ்வரம் மல்லி செடி: ஒரு எக்டரில் பயிரிட 7,500 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. பணமாக கொடுக்காமல் 1,500 மல்லிச் செடிகளை வழங்குகிறோம். விருப்பம் உள்ள விவசாயிகள் ஒரு எக்டருக்கான சிட்டா அடங்கலை கொடுத்து செடிகளை பெற்றுக் கொள்ளலாம்.செடி நடவு செய்த ஆறு மாதத்தில் பூக்கும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை எக்டருக்கு 60 முதல் 70 கிலோ வரை பூக்கள் பூக்கும். விவசாயிகள் நல்ல லாபம் பெறலாம்.

செடிகளுக்கு சொட்டு நீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சலாம். சொட்டு நீர் பாசனம் அமைக்க 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

செங்காம் கறிவேப்பிலை செடி: மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. நடவு செய்தபின் இலைகளை பூச்சி தாக்கினால் நேரில் சென்று தேவையான மருந்துகளை தெளித்து செடிகளை காப்பாற்ற நடவடிக்கை எடுப்போம். இச்செடிகளுக்கு குறைந்த அளவு தண்ணீர் போதும்.

எல்49 ரக கொய்யா செடிகள்: இவற்றை விவசாயிகள் விரும்பி வாங்குகின்றனர். நடவு செய்த ஆறு மாதத்தில் கொய்யா காய்க்க துவங்கும். முதல் வருடம் செடிகளில் காய்களை காய்க்க விடாமல் பூக்களை கிள்ளி எறிய வேண்டும். செடிகள் நன்கு வளர்ந்த பின் காய்களை காய்க்க விட வேண்டும். ஒரு எக்டருக்கு வருடத்திற்கு இரண்டு முதல் மூன்று டன் வரை கொய்யா காய்க்கும். குறைந்த அளவு தண்ணீர் போதும். இச்செடிகள் 50 சதவீம் மானியத்தில் வழங்கப்படுகிறது. இவ்வாறு கோமதி தெரிவித்தார்.

**பண்ருட்டியில் விவசாய சங்கம் போராட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,01:02 IST

பண்ருட்டி : பண்ருட்டியில் வெள்ள நிவாரணம் வழங்குவதில் முறைகேடு நடப்பதை கண்டித்து விவசாய சங்கம் சார்பில் "கோவிந்தா' போராட்டம் நடந்தது. வெள்ள நிவாரணம் வழங்குவதில் பாரபட்சம் மற்றும் முறைகேடு, வேளாண், தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் ஆட்சியாளர்களுக்கு சாதகமான போக்கை கண்டித்து மா.கம்யூ., தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் "கோவிந்தா' போராட்டம் பண்ருட்டி வேளாண்மை விரிவாக்க மையம் முன்பு நடந்தது. விவசாய சங்க வட்ட தலைவர் அமிர்தலிங்கம், லாரன்ஸ் தலைமை தாங்கினார். துணை தலைவர் கிருஷ்ணமூர்த்தி, பன்னீர், அஞ்சாபுலி, தமிழரசன் முன்னிலை வகித்தார். மாவட்ட தலைவர் துரைராஜ், மா.கம்யூ., வட்ட செயலர் சேதுராஜன், தனபால், எழுமலை உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை வேளாண் உதவி இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,00:45 IST

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது. இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் தேவநாதன்

வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

அனைத்து விவசாயிகளுக்கும் அவர்களின் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி விவசாயிகளின் பெயர், முகவரி, கல்வித்தகுதி தொலைபேசி எண், புஞ்சை, நஞ்சை மற்றும் தோட்டக்கால் நிலங்களின் சர்வே எண், உட்பிரிவு விபரம், மின் இணைப்பு விவரம் மற்றும் வங்கி, கூட்டுறவு வங்கி கணக்கு எண் ஆகிய விவரங்களுடன் அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது. விவசாயிகளுக்கென்று தனி குறியீட்டு எண் வழங்கப்படும். இந்த அட்டை இருந்தால் தான், இனி வேளாண் விரிவாக்க மையத்தில் இடுபொருட்களை பெற முடியும். உடன் விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி விண்ணப்பத்தை பூர்த்தி செய்து நில உரிமைக்கான சான்று, வங்கி பாஸ் புத்தக நகல் மற்றும் கல்வித்தகுதி, வயதிற்கான சான்று, பாஸ்போர்ட் சைஸ் போட்டோக்கள் இரண்டினை இணைத்து கொடுக்க வேண்டும். காலதாமதமின்றி விவசாயிகள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து பயன் பெற கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் தேவநாதன் தெரிவித்துள்ளார்.

**கரும்பு விவசாயிகள் சங்க பேரவை கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,00:38 IST

விழுப்புரம் : முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத்தின் பேரவை கூட்டம் கஞ்சனூரில் நடந்தது. தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தோடு இணைந்த இச்சங்கத்தின் கூட்டத்திற்கு ஆலை சங்க துணைத் தலைவர் சுப்ரமணியம் தலைமை தாங்கினார். ஈச்சங்குப்பம் ஊராட்சி தலைவர் மணி, மண்ணாங்கட்டி முன்னிலை வகித்தனர். ஆலை சங்க தலைவர் கதிர்வேல், செயலாளர் சிவராமன், மாவட்ட செயலாளர் ராதாகிருஷ்ணன், மாவட்ட சிறப்பு தலைவர் ராமமூர்த்தி சிறப்புரையாற்றினர். பின்னர் நடந்த நிர்வாகிகள் தேர்தலில் தலைவராக வரதராஜ், பொருளாளராக ஊராட்சி தலைவர் மணி தேர்வு செய்யப்பட்டனர்.
நடப்பு அரவை பருவத்திற்கு 3000 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். விலை தீர்மானிக்க முத்தரப்பு கூட்டம் நடத்த வேண்டும். வெட்டுக் கூலியை ஆலை நிர்வாகம் ஏற்க வேண்டும். எடை மோசடியை தவிர்க்க அரசு வேளாண் துறை மூலம் எடை மேடை அமைக்க வேண்டும். நடவு கரும்பிற்கு ஏக்கருக்கு 8000 ரூபாயும்,
மறு தாம்புக்கு 4000 ரூபாயும் மானியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 28ம் தேதி காலை விழுப்புரத்தில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

**விவசாய சேமிப்பு குடோன் அமைக்கமத்திய அமைச்சர் அடிக்கல் நாட்டினார்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,00:36 IST

விழுப்புரம் : பூங்குணம் கிராமத்தில் புதிதாக கட்டப்படும் தானிய சேமிப்பு கிடங்கிற்கு மத்திய அமைச்சர் தாமஸ் அடிக்கல் நாட்டினார். விழுப்புரம் அடுத்த பூங்குணம் கிராமத்தில் விவசாய தானிய சேமிப்பு கிடங்கு கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று மதியம் நடந்தது. சென்னை மத்திய உணவு கழக செயல் இயக்குனர் பி.பி. சிங் தலைமை தாங்கினார். சென்னை மண்டல அலுவலக பொதுமேலாளர் அரிராம் ரத்தோட், ஸ்ரீ பாலதிரிபுர சுந்தரி சேமிப்பு கிடங்கின் உரிமையாளர் பாலகாந்திராஜ் முன்னிலை வகித்தனர். மத்திய விவசாய, பொது வினியோகம், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் தாமஸ் புதிய சேமிப்பு கிடங்கிற்கான அடிக்கல் நாட்டு விழாவை துவக்கி வைத்து பேசினார். விழாவில் விழுப்புரம் உணவு தானிய சேமிப்பு கிடங்கின் மண்டல மேலாளர் ராமமூர்த்தி, கடலூர் மண்டல மேலாளர் ஏழுமலை, காங்., பொதுச் செயலாளர் சிறுவை ராமமூர்த்தி, மாவட்ட தலைவர் தனுசு, விழுப்புரம் இளைஞர் காங்., தலைவர் ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**ராஜராஜன் 1000 நெல் சாகுபடி நாட்டார்மங்கலத்தில் பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,00:36 IST

செஞ்சி : நாட்டார்மங்கலத்தில் விவசாயிகளுக்கு ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறை குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது. வல்லம் வட்டார வேளாண்மைத்துறை மூலம் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் நடந்த பயிற்சி முகாமை வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி துவக்கி வைத்து பேசினார். அப்போது, ராஜராஜன் 1000 நெல் சாகுபடியின் முக்கிய தொழில் நுட்பங்களான பாய் நாற்றங்கால், சதுர முறையில் நடவு செய்தல், கோனோவீடர் களைக்கருவியை கையாளுதல் உள்ளிட்டவை குறித்து விளக்கினார். பென்னகர் துணை வேளாண்மை அலுவலர் அபிமன்னன் நெல் சாகுபடிக்கான உரம் இடும் முறை, பயிர்பாதுகாப்பு ஆகியவை குறித்தும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடு பொருட்கள் மானியம் குறித்தும் விளக்கினார். விவசாயிகளுக்கு ராஜராஜன் நெல் சாகுபடி முறையில் வரிசை நடவு, கோனோவீடர் மூலம் களையெடுத்தல் தொழில் நுட்பங்களை வயலில் செயல் விளக்கமாக செய்து காட்டினர். வட்டார உதவி வேளாண் அலுவலர்கள் மாணிக்கம், ரவி, மனுவேல், உதவி விதை அலுவலர் கர்ணன் கலந்துக் கொண்டனர்.

**பட்டுப்புழு வளர்ப்பில் கிருமி நீக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,01:03 IST

ஊத்தங்கரை: ஊத்தங்கரை அடுத்த தாண்டியப்பனூர் கிராமத்தில் பட்டுப்புழு வளர்ப்பில் கிருமி நீக்கம், மருந்தடிப்பு பயிற்சி மற்றும் செயல் விளக்க முகாம் நடந்தது. தாண்டியப்பனூர் பட்டு விவசாயி முருகேசனின் புழு வளர்ப்பு மனையில் கிருஷ்ணகிரி மத்திய பட்டு ஆராய்ச்சி விரிவாக்க மையம் பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் அலுவலகம் ஆகியவை இணைந்து நடத்திய முகாமில் கிருமி நீக்கம் மற்றும் மருந்தடிப்பு செயல் விளக்கம் குறித்து, மத்திய பட்டு ஆராய்ச்சி விவாக்க மைய விஞ்ஞானி பாலசரஸ்வதி எடுத்து கூறினார். உதவி பட்டு ஆய்வாளர் கோவிந்தசாமி, இளநிலை ஆய்வாளர்கள் முருகன், சென்னகேசவன், திருநாவலர், சங்கர், சுப்பிரமணி, முதுநிலை தொழில்நுட்ப உதவியாளர் செல்வின், தொழில்நுட்ப உதவியாளர் சந்திரா மற்றும் பட்டு விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். கண்டுணர்வு பயிற்சிக்காக பட்டு விவசாயிகள் மண்டல பட்டு ஆராய்ச்சி நிலையமான கொடத்தி, பெங்களூர் மற்றும் அண்டை மாநில முன்னோடி பட்டு விவசாயிகளின் மல்பரி தோட்டங்களுக்கு அழைத்து செல்லப்பட்டு பட்டு வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய விளக்கமும், விழிப்புணர்வும் அளிக்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு எதிராக தி.மு.க., செயல்படுகிறது இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் காட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,01:17 IST

திருச்சி: தமிழ்நாடு வேளாண் மன்ற சட்டம் குறித்த கருத்தரங்கம் திருச்சியில் நேற்று நடந்தது. "நமது நெல்லைக் காப்போம்' இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் வரவேற்றார். இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தலைமை வகித்தார். தமிழ்நாடு வேளாண் மன்றச்சட்டத்தை நிரந்தரமாக தமிழக அரசு கைவிடவேண்டும். வேளாண்மையும், வேளாண் குறித்த ஆராய்ச்சி மற்றும் கல்வி அறிவையும் பன்னாட்டு மற்றும் வேளாண் தொழில் நிறுவனங்களின் ஆதிக்கத்தில் கொண்டு வரவே வேளாண் மன்றம் பயன்படும். விவசாயிகளுக்கு விதை மற்றும் வேளாண் உறவில் உள்ள உரிமை, அறிவு பகிர்வை இச்சட்டம் முடக்கிறது. ஒட்டு மொத்த பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய மனித வளங்களை, இயற்கை வளங்களை உறிஞ்சுவதற்கு தமிழக அரசை பயன்படுத்துகின்றன. அதன் விளைவாகவே அரசு இச்சட்டத்தை முன்வைக்கிறது. வேளாண் பல்கலையில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளில் 90 சதவீதம் மரபணு, மாற்றுத் தொழில்நுட்பம் போன்றவை, பன்னாட்டு நிறுவனங்களில் லாபத்துக்காக

அவர்களின் நிதியுதவியுடன் நடத்தப்படுகிறது. "வேளாண் மன்றச் சட்டத்தை தமிழக அரசு கொண்டு வரக்கூடாது' என்பதற்காக மாவட்டந்தோறும் ஆர்ப்பாட்டமும், கலெக்டர்களிடம் மனுவும் வழங்கப்படும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதைத்தொடர்ந்து நம்மாழ்வார் கூறியதாவது: வேளாண் மன்றச்சட்டத்தில் விவசாயி என்று ஓர் இடத்தில் கூட வார்த்தை இல்லாத நிலையில், வேளாண் பட்டதாரி அல்லாதோர் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினால், சிறைத்தண்டனை, அபராதம் விதிக்கலாம் எனவும், இச்சட்டத்தை எதிர்த்து யாரும் நீதிமன்றத்துக்கு செல்லக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இரு ஆண்டாக தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை இருமடங்காக உயர்ந்துள்ளது. விவசாயிகள் தற்கொலை நிற்கும் வரை, பொங்கல் பண்டிகை உள்ளிட்ட பண்டிகைகளை கொண்டாடக்கூடாது. வீடுதோறும் கறுப்புக் கொடிகள் ஏற்றி வைக்க வேண்டும். பன்னாட்டு நிறுவனங்களின் கைக்கூலியாக தமிழக அரசு இருக்கிறது. தி.மு.க., அரசு விவசாயிகளுக்கு எதிராக செயல்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**பு.பாடியில் இயற்கை வேளாண் தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,01:17 IST

மண்ணச்சநல்லூர்: புள்ளம்பாடியில் இயற்கை வேளாண் தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. லால்குடி தாலுக்கா புள்ளம்பாடி கருப்பண்ணசுவாமி கோவில் வளாகத்தில் வேளாண் துறை சார்பில் நடந்த இயற்கை வேளாண் தொழில்நுட்ப பயிற்சி முகாமிற்கு புள்ளம்பாடி ஒன்றியக்குழுத்தலைவர் ஜெயபிரகாஷ் தலைமை வகித்து விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கி பேசினார். இதில், அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சரவணன் பங்கேற்று இயற்கை கழிவுகளை மட்கவைத்து உரமாக்கி பயன்படுத்துதல், மண்புழு உரம் தயாரித்து பயன்படுத்துதல், உயிர் உரங்களான அசோஸ் பயிரில்லம், பாஸ்போ பாக்டீரியா பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெறும் விதிமுறைகளை விளக்கி பயிற்சியளித்தார். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் ராசு, ராஜா, செல்வம், ரகுபதி, சுதாகர், சேவியர் ஆகியோர் செய்தனர். துணை வேளாண் அலுவலர் லட்சம் நன்றி கூறினார்.

**வெள்ளூர் கிராமத்தில் வேளாண் இடுபொருள் வழங்கும் முகாம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,01:15 IST

அரியலூர்: அரியலூர் தாலுகா, வெள்ளூர் கிராமத்தில், வேளாண்துறை சார்பில், விவசாயிகளுக்கு அடையாள அட்டை மற்றும் விவசாய இடுபொருட்கள் வழங்கும் முகாம் நடந்தது. முகாமுக்கு

அரியலூர் வேளாண் உதவி இயக்குநர் (பொ) ராமலிங்கம் தலைமை வகித்தார். துணை வேளாண் அலுவலர் காசிநாதன் வரவேற்றார். வெள்ளூர் பஞ்சாயத்து தலைவர் கந்தசாமி முன்னிலை வகித்தார். முகாமில், ஐசோபாம் எண்ணெய் வித்து திட்டத்தின்கீழ், ஜிப்ஸமும், வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு ஜிங்சல்பேட் உரமும், புளூரோட்டஸ் பூஞ்சாணம் மற்றும் உயிர் உரம், நுண்சத்து உரம் உள்ளிட்டவை வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் ப்ரியா, ஸ்ரீதேவி உள்ளிட்டோர் செய்தனர். உதவி வேளாண் அலுவலர் கந்தசாமி நன்றி கூறினார்.

### குவிண்டால் நெல்லுக்கு ரூ.1,500 வழங்கணும்

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,01:06 IST

தஞ்சாவூர்: ""குவிண்டால் நெல்லுக்கு 1,500 ரூபாய் வழங்க வேண்டும்," என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக தொழிலாளர் சங்கம் ஏ.ஐ.டி.யு.சி., பொதுச் செயலாளர் சந்திரகுமார் கேட்டுக் கொண்டார். தஞ்சையில் நிருபர்களிடம் பொதுச் செயலாளர் சந்திரகுமார் கூறியதாவது: நெல் குவிண்டாலுக்கு சாதாரண ரகத்துக்கு 1,050 ரூபாயும், சன்னரகத்துக்கு 1,100 ரூபாயும் அரசின் நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலமான நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் வழங்கப்படுகிறது. மத்திய அரசு ஆண்டுக்கு 50 ரூபாய் உயர்த்துகிறது.

ஆனால், ஊக்கத்தொகையாக மாநில அரசு வழங்கிய 170 ரூபாயை படிப்படியாக குறைத்து தற்போது 50 ரூபாய்தான் வழங்குகிறது. குவிண்டாலுக்கு 1,500 ரூபாய் வழங்க வேண்டும். ஈரப்பதத்தை உயர்த்திக் கொள்முதல் செய்ய மாவட்ட நிர்வாகத்துக்கு அனுமதி வழங்க வேண்டும். மாவட்ட நிர்வாகம் சார்பில் மத்திய அரசுக்கு எழுதி அனுப்பி, அவர்கள் குழுவை அனுப்பி பார்வையிட்டு, பின் அனுமதி வழங்கும் முன் பெரும்பாலான அறுவடை முடிந்து விடுகிறது. இது தனியார் வியாபாரிகளுக்கு சாதகமாகவும், விவசாயிகளுக்கு இழப்பும் ஏற்படுகிறது. லாரியில் களத்துக்கு வந்து மொத்தமாக கொள்முதல் செய்யும் முறையும் வியாபாரிகளுக்குத் தான் லாபம் அளிக்கிறது. இவற்றை மாற்றி, ஆண்டு முழுவதற்கும் ஈரப்பதம் அறிவித்து, நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் கொள்முதல் செய்ய வேண்டும்.

அங்குளள் சுமைத்தூக்கும் தொழிலாளர்களுக்கு மூடைக்கு இரண்டு ரூபாய் அரசு கூலியாக வழங்குகிறது. தனியாரிடம் கூலி 10 ரூபாய். இதன் மூலம் ஊழலுக்கு அரசே வழிவகுக்கிறது. கூலியை உயர்த்தி, லாரிகளில் லோடுகளை எடுத்துச் செல்ல 150 ரூபாய் கையூட்டு பெறுவதை தடுக்க வேண்டும். லாரி இல்லாதவர்கள் லாரி இயக்குவதற்கான ஒப்பந்தம் பெற்று தவறுகளை செய்கின்றனர். அத்துடன், ஒரு கிலோ அரிசி குறைவுக்குக்கூட தொழிலாளர்களை

பழிவாங்குவதை நிறுத்த வேண்டும். நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் தற்போது உதவி மேலாளர் (தரக்கட்டுப்பாடு) மற்றும் உதவி மேலாளர் பணியிடம் 60க்கும் மேற்பட்டவைக்கு கடந்த ஐந்தாம் தேதி எழுத்து தேர்வு நடத்தி, இன்று (12ம் தேதி) நேர்முக தேர்வு நடத்தி 15ம் தேதி அவர்கள் பணியில் சேரும்படி அரசு முயல்கிறது. ஒரு பணியிடத்துக்கு ஐந்து லட்சம் ரூபாய் வரை பெற்றுக் கொண்டு நிரப்பப்படுவதாக புகார் வருகிறது. இதே பணிக்கு, அத்துறையில் பணி செய்து, பதவி உயர்வுக்காக காத்திருப்போர் 220 தர ஆய்வாளர்கள், 1,000 உதவி மேலாளர் பணி தகுதி கொண்டவர்களுக்கு வழங்க வேண்டும். ஒரு ரூபாய் அரிசி, பொது விநியோக திட்டம் போன்றவை இவர்களை நம்பித்தான் உள்ளதால், ஊழல் அற்ற முறையில் முறையாக பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது, மாநில பொருளாளர் கோவிந்தராஜன், அரசு போக்குவரத்துக்கழக தொழிற்சங்க கோட்ட பொதுச் செயலாளர் மதிவாணன் ஆகியோர் உடனிருந்தனர்.

**விலையேற்றத்தால் மதுரையில் அதிகரிக்கும் பூண்டு திருட்டு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,01:42 IST

மதுரை : மதுரையில் பூண்டு விலை கிலோ 400 ரூபாய் வரை விற்கப்படுவதால், டிரை சைக்கிளில் கொண்டு செல்லும்போது அடிக்கடி மூடைகள் திருடப்படுகின்றன. உற்பத்தி குறைவால், எப்போதும் இல்லாத அளவிற்கு மதுரையில் ஒரு கிலோ பூண்டு 400 ரூபாய் வரை விற்கப்படுகிறது. "கிராக்கி' அதிகரித்துள்ளதால், சில வியாபாரிகள் பதுக்கலிலும் ஈடுபட்டுள்ளனர். கீழமாசிவீதியில் பூண்டு கடைகளுக்கு வரும் மூடைகளை, டிரை சைக்கிள் மூலம் தங்கள் இடங்களுக்கு வியாபாரிகள் எடுத்துச் சென்று பாதுகாக்கின்றனர்.

அப்படி எடுத்துச் செல்லும்போது, மூடைகள் திருடப்படுவதாக புகார் எழுந்துள்ளது. இதுதொடர்பாக, லோடுமேன்கள் சார்பில், பொதுஜன நல உரிமைச்சங்க செயலாளர் பாண்டீஸ்வரி, விளக்குத்தூண் போலீசில் புகார் செய்துள்ளார். அவர் கூறியதாவது : மூடைகள் திருடுபோவதால், அதற்குரிய தொகையை நாங்கள் செலுத்த வேண்டியுள்ளது. பத்து கிலோ மூடை ஒன்றுக்கு 5 முதல் 10 ரூபாய் மட்டுமே கூலியாக கிடைக்கும். ஆனால் திருட படும் மூடை ஒன்றுக்கு 4000 ரூபாய் எங்களிடம் கடை உரிமையாளர்கள் வசூலிக்கின்றனர். போலீசில் புகார் செய்தால் எங்களை சந்தேகிக்கின்றனர். வழக்குப்பதிவு செய்து விசாரித்தால் மட்டுமே உண்மை நிலை தெரியவரும், என்றார்.

**அரளி, தாமரை விலை குறைந்தது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,22:43 IST

மதுரை : கடந்த வாரம் உச்சாணிக் கொம்பில் இருந்த அரளி விலை குறைந்து, ஒரு கிலோ 70 முதல் 80 ரூபாய்க்கு நேற்று விற்கப்பட்டது. தாமரையின் விலையும் குறைந்தது. ஒரு கிலோ மல்லிகைப்பூ500, பிச்சிப்பூ 400, மெட்ராஸ் மல்லி 300, சம்பங்கி 80, ரோஜா 80, செவ்வந்தி 80, மரிக்கொழுந்து 40 - 50, வாடாமல்லி 50, கோழிக்கொண்டை 60, துளசி 20 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கடந்த வாரம் ஒரு தாமரைப்பூ 15 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று 5 ரூபாயாக குறைந்தது. புதிய மல்லிகைப்பூ சீசன் இன்னும் ஒரு வாரத்தில் துவங்க உள்ளதால், பொங்கலுக்குப் பிறகு, பூ வரத்து அதிகரித்து விலை குறையலாம்.ஆனால் பொங்கல் வரை, தொடர்ந்து பூக்களின் விலை இருமடங்கு, மூன்று மடங்காக வாய்ப்புள்ளது, என்றார், மாட்டுத்தாவணி பூ வியாபாரிகள் சங்கத் தலைவர் ராமச்சந்திரன்.

**மாடு வளர்க்க ஆர்வமில்லை : அதிகரிக்கும் பால் தட்டப்பாடு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 11,2011,22:52 IST

ராமநாதபுரம் : பால் மாட்டு மானிய கடன் வழங்காததால் பால் உற்பத்தியாளர்கள் எண்ணிக்கை குறைந்து பால் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் வினியோகம் செய்யப்படும் பாலின் அளவும் பாதியாக குறைந்துவிட்டது. பசு மாடு வாங்க முன்பு மானியத்துடன் கடன் வழங்கியதால் ஏராளமான விவசாயிகள் பால்மாடு வாங்கி வளர்த்து வந்தனர். இதனால் கிராமங்களிலிருந்து பால் உற்பத்தி அதிகமாக இருந்ததால் , நகர் பகுதிகளில் பால் தட்டுப்பாடின்றி வினியோகிக்கப்பட்டது. கடந்த சில மாதங்களாகவே பசு மாடு வளர்ப்போரின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துவிட்டது. பசு மாட்டு கடன் மானியம் இல்லாததால் ,மாடு வாங்குவோர் எண்ணிக்கை குறைந்துவிட்டது. மாடு வைத்திருப்போருக்கும் மாடு வளர்ப்பதற்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டுள்ளன.

புண்ணாக்கு, வைக்கோல் போன்றவைகளில் விலைகள் உயர்ந்தநிலையில் ,கூடுதல் விலைகொடுத்து தீவனம் வாங்கி மாட்டை வளர்த்தும் பெரியளவில் லாபம் இல்லை என்பதால், மாடு வளர்ப்போர் எண்ணிக்கை சரியத்துவங்கிவிட்டன. மாடு வளர்ப்பதை பாரம்பரியமாகவும், பண்ணைகள் வைத்து நடத்துபவர்களும், சில விவசாயிகளும் மட்டுமே தற்போது மாடுகள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திலும் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. இதன்விளைவு தற்போது ராமநாதபுரம் நகரில்

பால் தட்டுப்பாடு அதிகரிக்க துவங்கியுள்ளது. ராமநாதபுரம் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திலிருந்து முன்பு 5000 லிட்டர் வரை பால் வினியோகிக்கப்பட்டு வந்தநிலையில், தற்போது 2500 லிட்டராக குறைந்துவிட்டது. காரைக்குடி ஆவின் பால் நிலையத்திற்கு இங்கிருந்துதினமும்100 லிட்டருக்கும் அதிகமாக சப்ளை செய்யப்பட்ட நிலையில் , 40 லிட்டர் மட்டுமே அனுப்பப்படுகிறது. பால் உற்பத்தி குறைந்துவிட்டதால் ,புதிதாக பால் கூப்பன் கேட்பவர்களுக்கு வினியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. பழைய வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே பால் வினியோகம் செய்யப்படுகிறது.

**சிறுமலஞ்சி சிறப்பு சந்தையில் வாழைத்தார் விற்பனை "ஜோர்'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,03:06 IST

ஏர்வாடி:சிறுமலஞ்சி வாழைக்காய் மார்கெட்டில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வாழைத்தார்கள் விற்பனை படுஜோராக நடந்தது.ஏர்வாடி அருகே சிறுமலஞ்சி என்ற திருவேங்கடநாதபுரம் உள்ளது. இங்குள்ள மார்கெட்டில் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் வாழைத்தார் விற்பனை நடக்கும். இங்கு நெல்லை, குமரி, தூத்துக்குடி மற்றும் தேனி மாவட்டங்களை சேர்ந்த பல்வேறு ஊர்களில் இருந்து ஏராளமான வாழைதார்கள் விற்பனைக்கு வருகின்றன.

இந்த வாழை தார்களை கொள்முதல் செய்ய நெல்லை, சங்கரன்கோவில், அம்பாசமுத்திரம், தென்காசி, சாத்தூர், கோவில்பட்டி, விருதுநகர், சிவகாசி, அருப்புக்கோட்டை, தூத்துக்குடி, நாகர்கோவில் மற்றும் கேரளா மாநிலத்தை சேர்ந்த பல்வேறு வியபாரிகளும் வருவார்கள்.பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நேற்று சிறுமலஞ்சி வாழைக்காய் மார்கெட்டில் சிறப்பு சந்தை நடந்தது. இந்த சந்தைக்கு கதளி, நாடு, சக்கை, தொழுவன், கோழிக்கோடு, செந்தொழுவன், கற்பூரவள்ளி, ரோபஸ்டா உள்ளிட்ட பல்வேறு வகைகளை சேர்ந்த 20 ஆயிரம் வாழைதார்கள் விற்பனைக்கு வந்தன. கடந்த சில மாதங்களில் வந்த வாழைத்தார்களின் வரத்தைவிட அதிகளவு வாழைதார்கள் பொங்கல் பண்டிகை முன்னிட்டு சிறப்பு சந்தைக்கு விற்பனைக்கு வந்தது.

இருந்தபோதிலும் கடந்த சில வாரங்களாக மந்தமாக விற்பனையாகி வந்த வாழைதார்களின் விலை சற்று முன்னேற்றம் காணப்பட்டது. குறிப்பாக 100 காய்கள் எண்ணம் கொண்ட தொழுவன் ரகங்கள் 400 ரூபாய் வரையிலும், கோழிக்கோடு ரகங்கள் 250 ரூபாய் வரையிலும், நாடு ரகங்கள் 330 ரூபாய் வரையிலும், செந்தொழுவன் தார்கள் 500 ரூபாய் வரையிலும், சக்கை தார்கள் 130

ரூபாய் அளவிலும், கற்பூரவள்ளி ரகங்கள் 170 ரூபாய் வரையிலும், கதளி தார்கள் 70 ரூபாய் வரையிலும் விற்பனையாகியது.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, ""கடந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை விட வாழைத்தார்கள் விற்பனை விலை சற்று உயர்ந்துள்ளது. இருந்தபோதிலும் விவசாய செலவு அதிகமாக இருப்பதால் தற்போது விற்பனையாகும் விலை விவசாயிகளுக்கு நஷ்டம்தான்" என்றனர்.பொங்கல் சிறப்பு சந்தையை முன்னிட்டு 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழைதார்கள் சந்தைக்கு வந்ததால் சந்தையில் வாழைதார்களும், அதனை விற்பனைக்கு கொண்டுவந்த விவசாயிகளும், கொள்முதல் செய்யவந்த வியாபாரிகள் அதிகளவு காணப்பட்டதால் சந்தை பகுதி திருவிழா போன்று காட்சியளித்தது.

**நெல்லையில் 201 விவசாயிகளுக்குரூ. 6.54 லட்சம் காப்பீட்டுத்தொகை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,02:57 IST

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் 201 விவசாயிகளுக்கு 6.54 லட்சம் ரூபாய் பயிர் இழப்பு காப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டது.புயல், வெள்ளம், வறட்சி, பூச்சி, நோயால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பை ஈடு செய்யும் வகையில் தேசிய வேளாண் காப்பீடு நிறுவனம் மூலம் பயிர் காப்பீட்டுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 2009ம்ஆண்டு கார் பருவத்தில் தென்காசி, செங்கோட்டை வட்டாரங்களில் இலத்தூர், கல்லூரணி, பண்பொழி, தென்காசி பகுதிகளில் நெற்பயிரை காப்பீடு செய்த 201 விவசாயிகளுக்கு பயிர் இழப்பு காப்பீட்டுத்தொகை 6 லட்சத்து 54 ஆயிரத்து 279 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.தென்காசி வட்டாரத்தில் ஏக்கருக்கு 154 ரூபாய் வீதம் 200.5 ஏக்கர் நெற்பயிரை 30 ஆயிரத்து 911 ரூபாய் பிரிமியம் செலுத்தி காப்பீடு செய்த 169 விவசாயிகளுக்கு 4 லட்சத்து 72 ஆயிரத்து 204 ரூபாய் காப்பீட்டுத்தொகை அளிக்கப்பட்டது. செங்கோட்டை வட்டாரத்தில் 65 ஏக்கர் பரப்பளவு நெற்பயிரை காப்பீடு செய்த 32 விவசாயிகளுக்கு ஒரு லட்சத்து 82 ஆயிரத்து 75 ரூபாய் காப்பீட்டுத்தொகை கிடைத்துள்ளது.

கீழப்பாவூர் வட்டாரம் நவநீதகிருஷ்ணபுரத்தில் விவசாயிகளுக்கு காப்பீட்டுத்தொகையை கலெக்டர் ஜெயராமன் வழங்கினார். தென்காசி வட்டாரத்தை சேர்ந்த 11 விவசாயிகளுக்கு 27 ஆயிரத்து 950 ரூபாய், செங்கோட்டை வட்டாரத்தை சேர்ந்த 2 விவசாயிகளுக்கு 9 ஆயிரத்து 718 ரூபாய் வழங்கப்பட்டது.மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தேவசகாயம், உழவர் பயிற்சி நிலைய துணை வேளாண்மை இயக்குனர் அழகிரிசாமி, கலெக்டரின் நேர்முக

உதவியாளர் (வேளாண்மை) வைத்தியலிங்கம், தென்காசி வேளாண்மை உதவி இயக்குனர் ஐரிஷ்சேகர் கலந்துகொண்டனர்.

**நெற் பயிரில் படைப்புழு தாக்குதல்கட்டுப்படுத்தும் வழி முறைகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,02:48 IST

தென்காசி:நெற் பயிரில் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ் சேகர் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:தென்காசி வட்டாரம் காசிமேஜர்புரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற் பயிரில் படைப்புழு தாக்குதல் தென்பட துவங்கியுள்ளது. இப்படைப்புழுவின் தாக்குதல் தீவிரமாகும் பட்சத்தில் பெரிய அளவில் மகசூல் இழப்பை ஏற்படுத்தும் என்பதால் விவசாயிகள் விழிப்புடன் இருக்க வேண்டும்.படைப்புழுவானத நெற் பயிர் தூர் கட்டும் பருவத்தில் தாக்கும் போது இலை யூனிகØளியோ அல்லது இலையின் ஓரத்தையோ வெட்டி உணவாக உடற்கொள்கிறது. பெரும்பாலும் நடு நரம்பு தவிர பிற இலைப்பகுதி முழுவதையும் உண்டுவிடும். சில நேரத்தில் முழு இலையினையும் உண்கிறது. இதன் பாதிப்பால் மாடு மேய்ந்தது போன்ற தோற்றத்தை பயிர் அளிக்கும். மேலும் தூரின் அடிப்பகுதி மற்றும் கதிரின் அடிப்பகுதியை வெட்டி விடும். தண்ணீர் வடிக்கப்பட்ட வயல்களில் இப்பூச்சி தாக்குதல் அதிகமாக தென்படும்.

காலை, மாலை மற்றும் இரவு நேரத்தில் இப்புழுக்கள் நெற் பயிரை தாக்குவதாலும், பகல் நேரத்தில் நெற் பயிர் தூரின் மையப்பகுதி, புல்களின் அடிப்பகுதி மற்றும் வரப்புகளில் உள்ள சிறிய இடைவெளிகளில் மறைந்து கொள்வதாலும் இப்புழுக்களை எளிதாக காண்பது இயலாது. நெற் பயிரில் இலை வெட்டப்பட்டிருக்கும் விதத்தை பார்த்து இப்புழுக்களின் நடமாட்டத்தை எளிதாக அறிந்து கொள்ளலாம்.படைப்புழு நடமாட்டம் தென்பட துவங்கியவுடன் ஒரு ஏக்கருக்கு புவேரியா பெசியானா 400 கிராம் அல்லது பேசில்லஸ் துரின்சியன்சிஸ் 400 மில்லி ஆகியவற்றில் ஒன்றை தெளிக்க வேண்டும். ஒரு குத்துக்கு ஒரு படைப்புழுவிற்கு மேல் இருக்கும் போது டைகுளோர்வாஸ் 250 மில்லி, குளோர்பைரிபாஸ், டிரையசோபாஸ், புரோபனோபாஸ் 400 மில்லி மருந்து இவற்றில் ஏதேனும் ஒரு மருந்தை 200 லிட்டர் நீர் உபயோகித்து மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும்.

குலை நோய்:வேதம்புதூர் நெடுங்குளம் பாசனத்தில் சுமார் 25 எக்டர் பரப்பில் நெற் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் நெற் பயிரில் குலை நோய் தென்படுகிறது.

இந்நோயானது இலையில் கண்வடிவ புள்ளிகளாக தோன்றும். நோய் தீவிரமாகும் போது புள்ளிகள் ஒன்றொடொன்று இணைந்து இலைகள் காய்ந்து கருதி விடும்.இந்நோயை கட்டுப்படுத்த கிட்டாசின் 200 மில்லி, டிரைசைக்ளோசல் 75 சதம் 120 கிராம், ஹெக்சகோனசோல் 5 சதம் 400 மில்லி, ஐசோபுரோதையலேன் 40 சதம் 300 கிராம், டெபுகோனசோல் 25.9 சதம் 300 கிராம், இப்ரோபென்பாஸ் 200 கிராம், எடிபன்பாஸ் 200 மில்லி, கார்பண்டாசிம் 100 கிராம், கார்பெண்டாசிம் 12 சதம் மற்றும் மேங்கோசெப் 63 சதம் 300 கிராம் ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் நீர் உபயோகித்து ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ் சேகர் அறிக்கையில் கூறியுள்ளார்.

**வடகரையில் நெட்டை, குட்டைதென்னங்கன்றுகள் வினியோகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,02:46 IST

தென்காசி:வடகரை தென்னை நாற்றுப்பண்ணையில் நெட்டை, குட்டை தென்னங்கன்றுகள் வினியோகம் செய்யப்படுகிறது.இதுகுறித்து தென்காசி வேளண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தென்னை விவசாயிகளுக்கு லாபகரமான பயிராக தென்னை விளங்கி வருகிறது. தென்னையை நடவு செய்ய டிசம்பர்-ஜனவரி மாதமே ஏற்ற காலம். 25 அடி இடைவெளியில் நடவு செய்ய ஒரு ஏக்கருக்கு 70 தென்னங்கன்றுகள் தேவை. நடும் போது 3 அடி நீள, கல ஆழத்தில் குழி வெட்டி குழிக்கு 20 கிலோ மணல் பரப்பி தென்னங்கன்றுகளை நடவு செய்ய வேண்டும்.

தென்னங்கன்றுகளில் நெட்டை ரகம் 15 ரூபாய்க்கும், நெட்டை,குட்டை ஒட்டு ரகம் 25 ரூபாய்க்கும் வடகரை தென்னை நாற்றுப்பண்ணையில் வினியோகம் செய்யப்படுகிறது. எனவே விவசாயிகள் தங்களுக்கு தேவையான தென்னங்கன்றுகளை வாங்கி பயன்பெறலாம். மேலும் விபரங்களுக்கு செல் எண் 9486428518, போன் எண்04633-280185ல் தொடர்பு கொள்ளலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ் சேகர் அறிக்கையில் கூறியுள்ளார்.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,00:00 IST



**சிறுமக்காச்சோளம்-கோ.பி.சி.-1:** சின்ன மக்காச்சோளம் (பேபி கார்ன்) கோ.பி.சி.-1 1998ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் சாகுபடிக்காக வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் இதன் சாகுபடி பரப்பு மிகவும் குறைந்துள்ளது. பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் இதற்கு தற்காலத்தில் நல்ல வரவேற்பு உள்ளது. இம்மாநிலங்களில் பதனிடும் தொழிற்கூடங்களும் ஏற்றுமதி வாய்ப்புகளும் பெருகியதாலும், உழவர்கள் மத்தியில் ஒரு சிறந்த உணவுப்பொருளாக வளர்ச்சி அடைந்துள்ளது. சிறு மக்காச்சோளம் உண்பதற்கு காய்கறி போன்று பயன்படும். செடிகளில் விதைத்த 50 நாளில் ஒவ்வொரு கணுவிலும் ஒரு கதிர் வீதம் 2-3 கதிர்கள் வரை உருவாகும்.

இச் செடியின் உச்சியில் தோன்றும் ஆண் பூக்கள் உடனடியாக நீக்குவதால் மகரந்த சேர்க்கை நடைபெறுவது தடுக்கப்பட்டு பெண் (சூலகக்) கதிர்கள் மட்டும் வளரத் தொடங்கும். இளங்கதிர்களின் சூழிலை (1-3 செ.மீ.) தெரிந்த உடனே அறுவடை செய்து, மேலுறையை நீக்கி, பச்சையாகச் சாப்பிடவும், பல உணவு வகைகளை தயார் செய்யவும் பயன்படுத்தலாம். இளங் கதிர்கள் அறுவடை விதைத்த 50 முதல் 65 நாட்களுக்குள் முடிவதால் இதனுடைய பச்சைத்தட்டு ஒரு சிறந்த தீவனமாக பயன்படுகிறது. இளங்கதிர்களில் அதிக மாவுச்சத்து (7.1 சதம்), இனிப்புடன் கூடிய நல்ல சுவை (இனிப்புச்சத்து 1.3 சதம்) மற்றும் காய்கறிகளுடன் ஒப்பிடும் அளவிற்கு ஊட்டச்சத்துக்கள் மிகுந்தது.

இந்த ரகத்தில் விதை உற்பத்தி செய்ய வேண்டுமானால் ஆண் பூக்களைச் செடியிலிருந்து நீக்கக் கூடாது. மணிகள் முற்றி முழுவதும் விதைகள் ஆவதற்கு குறைந்தது 105 நாட்கள் ஆகும். இவ்வகை கதிர்களின் மணிகள் நேர் வரிசையுடன் சிறிய மஞ்சள் நிறத்தை உடையவை.

**கோபி.சி.1 ரகத்தின் சாகுபடி நுட்பங்கள்:** ஆண்டு முழுவதும் இறவைப் பயிராக பயிரிடலாம். மானாவாரியில் ஆடிப்பட்டம் (ஜுன்-ஜுலை), மாசிப்பட்டம் (செப்டம்பர் - அக்டோபர்) உகந்தது. இளங்கதிர் 50-65 நாட்கள், பச்சைத்தட்டு 65-70 நாட்கள், விதை 100-105 நாட்கள் வயதுடையது. விதையளவு எக்டருக்கு 25 கிலோ தேவை. இடைவெளி - பாருக்கு பார் ஒன்றரை அடி (45 செ.மீ.) செடிக்குடிச் செடி10 அங்குலம் (25 செ.மீ.) கொடுத்து விதைக்க வேண்டும். உர அளவு - 150:60:40 கிலோ/எக்டர் (தழை, மணி சாம்பல்சத்து). அடி உரம்-எக்டருக்கு தொழு உரம் 125 டன்; யூரியா 125 கிலோ, சூப்பர் 375 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ் 33 கிலோ. மேலுரம் - விதைத்த 25ம் நாள் எக்டருக்கு யூரியா 165 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ் 33 கிலோ.
நீர்பாசனம்: விதைத்தவுடன் மற்றும் 4ம் நாள் 15, 25, 35, 45, 55ம் நாட்களில் நீர் பாய்ச்ச வேண்டும்.
**களை நிர்வாகம்:** விதைத்த 15ம் நாள் முதல் களை எடுக்க வேண்டும். 25ம் நாள் பார்களை மாற்றி மண் அணைக்க வேண் டும். 40-45 நாட்களில் ஆண் பூக்களை நீக்குதல் (பெண் பூக்களின் குஞ்சம் வெளிவந்தவுடன்) கிளைக் கதிர்களின் அறுவடை எண்ணிக்கை: 6-7 தடவை.
**பயிர் பாதுகாப்பு:** விதைக்கும்போது பியூரடான் 3ஜி குருணைகள் எக்டருக்கு 10 கிலோ வீதம் இடவேண்டும். நீர்பிடிப்பு பகுதிகளில் தவிர மற்ற அனைத்துப் பகுதிகளுக்கும் ஏற்றது.
மகசூல்: இளங்கதிர்கள் - 6660 கிலோ/எக்டர். பச்சைத்தட்டு 32.2 டன்/எக்டர். இளங்கதிராக அறுவடைச்செய்யாமல் விதைக்கு மட்டும் சாகுபடி செய்தால் 2000 கிலோ விதை/எக்டர் கிடைக்கும்.
தாய்லாந்து, தைவான், தென் அமெரிக்கா, ஜாம்பியா, ஜிம்பாப்வே, சைனா, நேபாளம், இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் சாகுபடி செய்யப்படுகிறது. இளங்கதிர்கள், பதனிடப்பட்ட சிறு மக்காச்சோள கதிர்கள் ஏற்றுமதி செய்யும் நாடுகள் - தாய்லாந்து, தைவான், தென் அமெரிக்கா, ஜாம்பியா, ஜிம்பாப்வே, சைனா. இறக்குமதி செய்யும் நாடுகள் - அமெரிக்கா, ஜப்பான், ஹாங்காங், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, மலேசியா, இந்தோனேசியா, கனடா, சவுதி, நியூசிலாந்து மற்றும் பல நாடுகள்.(தகவல்: கோ.நல்லதம்பி, க.ந.கணேசன், பெ.வீரபத்திரன், சிறுதானிய மேம்பாடு நிலையம், பயிர்பெருக்க மற்றும் மரபியல் மையம், கோயம்புத்தூர்-641 003).

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,00:00 IST



**இயற்கை முறையில் தென்னையைத் தாக்கும் ஈரியோபைட் சிலந்தி கட்டுப்பாடு:** இயற்கை முறையில் விவசாயம் செய்யும் கொழுமம் கிராமத்தைச் சேர்ந்த பிறைசூடிப் பித்தன் தன்னுடைய தென்னந்தோப்பில் முழுவதும் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து இருக்கிறார். உழவு போட்டு நாலு வருஷமாகிறது. விஷச்செடிகள் தவிர மற்ற செடிகளை அகற்றுவதில்லை. பாசன நீருடன் பஞ்சகவ்யா, அமுதக்கரைசல் கலந்து போகும்படி பம்ப்செட் குழாயில் டேங்க் இணைத்து ஒவ்வொரு பாசனத்திலும் பஞ்சகவ்யா, அமுதக்கரைசல் என மாறி மாறி பாசன நீரில் சென்றுகொண்டே இருக்கும் என்று கூறுகிறார் விவசாயி. தென்னை மரத்தைச் சுற்றிலும் சோற்றுக்கற்றாழை பயிர் செய்துள்ளார். கற்றாழையின் கசப்புத்தன்மை தென்னைமர வேர்களுக்கு செல்கிறது. இதனால் தென்னையைத் தாக்கும் ஈரியோபைட் வாடல் நோய் போன்றவை குறைகிறது. இளம் குரும்பைகள் அதிக அளவு உதிர்வதும் குறைந்துவிட்டது.
சராசரியாக ஒரு மரத்திலிருந்து 40 நாட்களுக்கு ஒரு முறை 20 முதல் 25 முற்றிய காய்கள் அறுவடை செய்கிறார். தேங்காயின் தரம், கொப்பரையின் பிழிதிறன் அதிகரித்துள்ளது. ஆண்டுக்கு இருமுறை மரத்துக்கு 10 கிலோ தொழு உரம், 5 கிலோ மண்புழு உரமும் இடுகிறார். தோப்பினுள் விழும் தென்னை மட்டைகளை வெட்டி, மரத்தைச் சுற்றிலும் மூடாக்காகப் போட்டுவிடுவதால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் வெயில் காலங்களில் ஈரம் காக்கப்படுவதுடன் மட்கி எருவாகவும் மாறிவிடுகின்றன தென்னைக் கழிவுகள் **(தகவல்: பசுமைவிகடன், 10.1.11)**

**எர்த் ஆகர் - குழிபோடும் கருவி:** 2 ஸ்ட்ரோக் இன்ஜின் அமைப்புடைய இந்தக்கருவி ஒரு லிட்டர் பெட்ரோலைக் கொண்டு ஒரு மணி நேரம் வேலை செய்யும் திறன் கொண்டது. ஒரு மணி நேரத்தில் 50-60 குழிகளை வெகு எளிதாகத் தோண்டிவிடும். இது 10 கிலோ எடை கொண்டது

என்பதால் எந்த இடத்திற்கும் இதை எடுத்துச் செல்லலாம். ஆள் வைத்து குழி எடுக்க ஒரு குழிக்கு 8,10ரூபாய் ஆகும் செலவை எர்த் ஆகர் ஒரு குழிக்கு ரூ.3 என்ற செலவில் மிச்சப்படுத்துகிறது. தேயிலை, காபி, மா, வாழை, தென்னை, பாக்கு, தேக்கு போன்ற பயிர்களுக்கு குழியிட இதை பயன்படுத்தலாம். வாழைமரம் காற்றில் அசைந்து விழாமல் இருக்க சப்போர்டுக்கு குச்சி நடுவதற்கு இதனைக் கொண்டு குழியிடலாம்.
எர்த் ஆகரின் அடக்கவிலை ரூ.43,680/-. அதில் ரூ.21 ஆயிரம். மானியத் தொகை போகை ரூ.22,680-ஐ விவசாயிகள் கொடுத்தால் போதும். மேக்ஸ் இன்ஜினியரிங் நிறுவனம் 50 சதவீத மானிய சலுகையில் வழங்கிவருகிறது. சிட்டா, அடங்கல் கொண்டு வந்தால் இந்நிறுவனம் மானியத் தொகையைப் பெற்றுக்கொடுத்து இயந்திரம் வழங்க தயாராக உள்ளது. எர்த் ஆகர் எவ்வாறு இயங்குகிறது என்பதை வீடியோ காட்சியாக பார்த்து அறிந்துகொள்ள தீதீதீ.தூணிதtதஞுது.ஞிணிட்/தீச்tஞிட?தி=அச்3து8சுNநூ6டு என்ற இணைய முகவரியை தொடர்புகொள்ளலாம். மேலும் தொடர்புக்கு "மாக்ஸ் இன்ஜினியரிங், 24, வண்டிக்காரன் தெரு, மடுவங்கரை, கிண்டி, சென்னை-32. 044-3250 0041, 98841 00041'.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**வீரிய ஒட்டு தென்னை – ராம்கங்கா**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,00:00 IST



கங்கா பாண்டம் குட்டைரகத் தென்னை யைத் தாயாகவும், மேற்கு கடற்கரை நெட்டை ரகத் தென்னையை ஆணாகவும் வைத்து மகரந்தச் சேர்க்கை மூலம் இணைத்து உருவாகும் கன்றைக் குட்டை து நெட்டை (ஈ து கூ) ராம்கங்கா என அழைக்கின்றோம். ஆரோக்கியமான, செழிப்பான கன்று வளர்ச்சி. மட்டைகள் நெருக்கமாகவும், அருகருகே அதிகப்படியாகவும் இருக்கும். இதனால் மரங்கள் குறைந்த வருடத்திலேயே உயரமாக வளர்வது இல்லை. மட்டைகளின் நீளம் நாலேகால் முதல் நாலரை மீட்டர். வருடம் 16 முதல் 18 மட்டைகள். வருடத்திற்கு 16 முதல் 18 பாளைகள்.

வளர்ந்த மரங்களில் 35 முதல் 40 மட்டைகள் இருக்கும். மண்ணின் தன்மை மற்றும் பராமரிப்பை பொறுத்து 24 முதல் 30 மாதங்களில் பூம்பாளை வெளிவரும். காய்கள் உருண்டையாகவும் பச்சை மற்றும் இளஞ்சிவப்பு நிறத்தில் பளபளப்பாக இருக்கும். இளநீரின் அளவு 500 முதல் 700 மிலி இருக்கும். இளநீர் அதிக சுவையுடன் இனிப்பாக இருக்கும். வளர்ந்த மரங்களில் மட்டை சரிதல் குறைவாக இருக்கும். வருடத்தில் மண்ணின் தன்மை, சீதோஷ்ண நிலை மற்றும் பராமரிப்பை பொறுத்து 225 முதல் 250 இளநீர் காய்கள் அல்லது 200 முதல் 225 காய்கள் கிடைக்கும். கொப்பரை எடை 100 காய்க்கு 16 முதல் 18 கிலோ.
நடவு முறை: இடைவெளி 25 முதல் 26 அடி வரை. குழியின் அளவு 3 து 3 து 3 நீளம் து அகலம் து ஆழம். நடவு செய்யும் முறை. உர அளவு - தழைச்சத்து 1000 கிராம், மணிச்சத்து 320 கிராம், சாம்பல் சத்து 2100 கிராம் தேவை.
5. ஒரு மரத்திற்கு முதல் வருடம் யூரியா 475, டி.ஏ.பி. 175, பொட்டாஷ் 750, நுண்ணூட்டச் சத்துக்கள் நிறுவனங்கள் பரிந்துரைக்கப்பட்ட அளவும், தொழு உரம் 10 கிலோ முதல் 50 கிலோ வரையும் கொடுக்கலாம். இரண்டாம் வருடம் யூரியா 630, டி.ஏ.பி. 230, பொட்டாஷ் 1000, நுண்ணூட்டச் சத்துக்கள் நிறுவனங்கள் பரிந்துரைக்கப்பட்ட அளவும், தொழு உரம் 10 கிலோ முதல் 50 கிலோ வரையும், மூன்றாம் வருடம் யூரியா 950, டி.ஏ.பி. 350, பொட்டாஷ் 1500, நுண்ணூட்டச் சத்துக்கள் நிறுவனங்கள் பரிந்துரைக்கப்பட்ட அளவும், தொழு உரம் 10 கிலோ முதல் 50 கிலோ வரையும் நான்காம் வருடம் யூரியா 1900, டி.ஏ.பி. 700, பொட்டாஷ் 3500, நுண்ணூட்டச் சத்துக்கள் நிறுவனங்கள் பரிந்துரைக்கப்பட்ட அளவும், தொழு உரம் 10 கிலோ முதல் 50 கிலோ வரையும் கொடுக்கலாம். (மேற்சொன்ன உர அளவுகள் மண்ணின் தன்மையைப் பொறுத்து மாறுபடும்)
6. குருத்து அழுகல் நோயை கட்டுப்படுத்த ப்ளூகாப்பர் 5 கிராம் மற்றும் மோனோகுரோட்டோபாஸ் 5 மில்லி 1 லிட்டர் தண்ணீரில் கலந்து மாதம் ஒரு முறை குருத்தில் ஊற்றவும். குறிப்பு: மூடிய உறையுடன் கூடிய மகரந்தச் சேர்க்கை முறையில் கரு ஒட்டு செய்யப் படுகிறது.தொடர்புக்கு: உமாபதி, 04255-252 166, 98422 62166, 98428 62166.-கே.சத்தியபிரபா, உடுமலை.

**தென்னையில் ஊட்டச்சத்து**

பதிவு செய்த நாள் : ஜனவரி 12,2011,00:00 IST

தென்னையில் ஒரு குலையில் சுமார் 40 முதல் 50 வரை குரும்பைகள் தோன்றினாலும் குறைந்த அளவே தேங்காய்களாக மாறுகின்றன. மற்றவை உதிர்ந்துவிடுகின்றன. அதிகமாக குரும்பைகள் உதிர்வதற்கு வறட்சி, மோசமான தட்பவெப்பநிலை, ஊட்டச்சத்து குறைவு, ஹார்மோன்கள்

எனப்படும் வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் மண்ணின் களர் உவர் தன்மைகள் ஆகியவை முக்கிய காரணங்களாகும். இவைகளில் நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் பற்றாக்குறைகளை வேர்மூலம் டானிக் செலுத்துவதால் நிவர்த்தி

**செய்துவிடலாம். பயன்கள்:** முக்கியமான சத்துக்கள் சரியான விகிதத்தில் கிடைக்கின்றன. இலைகளில் பச்சையம் அதிகரித்து ஒளிச்சேர்க்கை மேம்படுவதால் மரத்தின் வளர்ச்சி அதிகரிக்கிறது. உயிர்வேதியியல் பணிகளுக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களான ஊட்டச்சத்துக்கள் தடையின்றி கிடைப்பதால் மரத்தின் வீரியம் அதிகரிக்கின்றது. போரான் மற்றும் துத்தநாகம் போன்ற நுண்ணூட்டங்களும் ஆக்சின் போன்ற வளர்ச்சி ஊக்கியும், டானிக்கில் உள்ளதால் குரும்பைகள் உதிர்வதும் ஒல்லிக்காய்கள் உற்பத்தியாவதும் வெகுவாக குறைகின்றது. பூச்சி, நோய், வறட்சி மற்றும் தட்பவெப்ப நிலைகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இயற்கையான எதிர்ப்புசக்தி மரத்தில் உருவாக்கப்படுகிறது.

**வேர்மூலம் ஊட்டச்சத்து செலுத்தும் முறை:** மரத்திலிருந்து இரண்டு முதல் மூன்று அடி தள்ளி சுமார் நான்கு அங்குல ஆழத்திற்குக் கீழ் உறிஞ்சும் வேர்கள் அமைந்திருக்கும். இந்தப்பகுதியில் பென்சில் கனமுள்ள மஞ்சள் நிற வேர் ஒன்றை தேர்வு செய்து வேரின் நுனியை மட்டும் கத்தி அல்லது பிளேடு உபயோகித்து சாய்வாகச் சீவி விடவும். பின்னர், டானிக் உள்ள பையின் அடிவரை வேரை நுழைத்து, வேரையும் பையின் மேல் பாகத்தையும் நூலால் கட்டிவிடவும். மண்ணில் ஈரத்தன்மை குறைவாக இருந்தால் ஒரு மணிநேரத்தில் டானிக்கை வேர் உறிஞ்சிவிடும். எனவே வெயில் நேரத்திலும் அல்லது பாசனத்திற்கு முன்பும் டானிக்கை கட்டிவிட்டால் வேர் விரைவாக உறிஞ்சிவிடும். ஆறு மாதத்திற்கு ஒரு முறை செலுத்த வேண்டும்.
ஒரு மரத்திற்கு 200 மில்லி டானிக் தேவை. இதை பாலிதீன் பையில் அடைத்து சீலிட்டு ரூ.5க்கு விற்கப்படுகிறது. நீண்டதூர விவசாயிகளின் நலன் கருதி, அடர்திரவம் தயாரித்து, 2, 5, 10 மற்றும் 20 லிட்டர் கேன்களில் விற்பனை செய்யப்படுகிறது. உதாரணமாக 10 லிட்டர் அடர் திரவத்துடன் 40 லிட்டர் குடிநீர் சேர்த்து 50 லிட்டர் டானிக் தயாரிக்கலாம். இதிலிருந்து 200 மில்லி வீதம் பாலிதீன் பையில் ஊற்றி ஒவ்வொரு மரத்திற்கும் கட்டிவிடலாம். ஆகவே, 10 லிட்டர் டானிக்கை 250 மரங்களுக்கு கொடுக்கலாம். அடர் திரவத்தின் விலை ஒரு லிட்டருக்கு ரூ.125. தேவையான பாலிதீன் பைகள் இலவசமாக தரப்படும். கேன் விலை கூடுதலாக வசூலிக்கப்படும். அடர் திரவத்தை நீண்ட தூரத்திற்கு எளிதாக எடுத்துச்சென்று பின் தேவைக்கேற்ப விவசாயிகளே தண்ணீர் சேர்த்து டானிக் தயார் செய்துகொள்ளலாம்.
கிடைக்குமிடம் மற்றும் விபரங்களுக்கு:பேராசிரியர் மற்றும் தலைவர்,விதை அறிவியல் மற்றும் நுட்பவியல் துறை,வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,மதுரை-625 104. 0452-242 2956 (விரிவு: 246) .

**கொழிஞ்சாம்பாறை கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் விழா அச்சுதன் எம்.எல்.ஏ பங்கேற்பு**




விழாவில்அச்சுதன் எம்.எல்.ஏ பேசியபோது எடுத்தபடம்.

*கொழிஞ்சாம்பாறை,*
*ஜன.12–*
*கொழிஞ்சாம்பாறை கூட்டுறவு வங்கியின் வேலைநேரத்தில் மாற்றம் மற்றும், விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் விழா நடந்தது.*

*வங்கி வேலை நேரம் மாற்றம்*

*கொழிஞ்சாம்பாறை கூட்டுறவு வங்கி காலை 8 மணி முதல் இரவு 7மணிவரை இரண்டு ஷிப்டுகளாக செயல்பட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.*
*இதன்படி முதல் ஷிப்டு காலை 8 மணி முதல் மதியம் 1.30 மணிவரையும், 2–வது ஷிப்டு மதியம் 2 மணி முதல்7மணி வரையும் செயல்படும்.*
*அதே நேரத்தில் டெபாசிட் செய்பவர்களுக்கு அதிக வட்டி கொடுக்கவும், விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் விவசாய கடன், தங்கத்தின்பேரில் கடன் போன்றவை வழங்கவும் வங்கி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.*

*அறிவிப்பு விழா*

*இந்த நிலையில் வங்கியின் நேரம் மாற்றம், குறைந்த வட்டியில் விவசாய கடன்*

*வழங்குவது பற்றிய அறிவிப்பு விழா வங்கி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. விழாவுக்கு வங்கி தலைவர் தணிகாசலம் தலைமை தாங்கினார். விழாவை சித்தூர் தொகுதி எம்.எல்.ஏ அச்சுதன் தொடங்கி வைத்தார். வட்டார பஞ்சாயத்து தலைவர் கோபால்சாமி, பஞ்சாயத்து உறுப்பினர்களான பீரீதா, பொன்னுராஜ், காங்கிரஸ் மண்டல தலைவர் ரதீஷ் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.*
*முன்னதாக வங்கி உதவித்தலைவர் திலீப்குமார், வரவேற்றார். முடிவில் வங்கி செயலாளர் ஷோபனாநன்றிகூறினார்.*

## உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டால் சர்க்கரை ஏற்றுமதி குறித்த முடிவில் மாற்றம் இல்லை

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு ஜனவரி மாதம் 30–ந் தேதிக்குப் பிறகு பகிரங்க பொது உரிமத் திட்டத்தின் கீழ் 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்படும் என மத்திய உணவு மற்றும் வேளாண் துறை அமைச்சர் சரத்பவார் உறுதிபட தெரிவித்துள்ளார்.*
*பணவீக்கம்*
*உணவு பணவீக்கம் மிகவும் உயர்ந்து வருவதையடுத்து, இந்த ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அதேசமயம் திட்டமிட்டபடி 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்படும் என சரத்பவார் தெரிவித்தார். நடப்பு 2011–12–ஆம் சர்க்கரை பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நாட்டில் சர்க்கரை உற்பத்தி 2.45 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம் 2.30 கோடி டன் பயன்படுத்தப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது. ஆக கடந்த மூன்று ஆண்டுகளில் தற்போதுதான் முதன்முறையாக தேவைப்பாட்டைக் காட்டிலும் உற்பத்தி அதிகரிக்க உள்ளது.*
*சென்ற 2010–11–ஆம் பருவத்தில் உற்பத்தி 1.88 கோடி டன்னாக இருந்தது. இதனையடுத்து சர்க்கரை இறக்குமதி மீதான தீர்வை ரத்து செய்யப்பட்டது. நடப்பு பருவத்தில் உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டால் இம்மாதம் 1–ந் தேதியிலிருந்து சர்க்கரை இறக்குமதி மீது மீண்டும் 60 சதவீத வரி விதிக்கப்பட்டது.*
*பரிசீலனை*
*உணவு பணவீக்கம் அதிகரித்து வருவதால் மார்ச் மாதத்தில் இதனை 20–30 சதவீதமாக குறைப்பது குறித்து மத்திய உணவு அமைச்சகம் பரிசீலனை செய்து வருகிறது. சென்ற பருவத்தில் சர்க்கரை உற்பத்தி குறைந்ததால் வர்த்தகர்கள் இருப்பு வைப்பதற்கான குறைந்தபட்ச அளவை 200 டன்னாக மத்திய அரசு குறைத்தது. இந்த விதிமுறை சென்ற டிசம்பர் 31–ந் தேதியுடன் நிறைவடைய இருந்தது. இது, மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.*

## காய்கறிகளை பதப்படுத்துவது எவ்வாறு? வேளாண் பல்கலைக்கழகத்தில் 18–ந் தேதி பயிற்சி

கோவை, ஜன.12–
கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் காய்கறிகளை பதப்படுத்துவது எவ்வாறு என்பது குறித்த பயிற்சி வருகிற 18 மற்றும் 19–ந் தேதிகளில் நடக்கிறது. இந்த பயிற்சியில் உலர வைக்கப்பட்ட காய்கறிகள், ஊறுகாய் தயாரிப்பு, மிட்டாய் தயாரித்தல், தயார்நிலை உணவுகள் மற்றும் சட்னி தயாரித்தல் ஆகியவை குறித்த பயிற்சி வழங்கப்படும்.
இந்த பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் ரூ.1,000 செலுத்தி தங்களது பெயர்களை முன்பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சி கட்டணத்தை முதல்வர், வேளாண் பொறியியல், கோவை என்ற பெயரில் வங்கி வரைவோலையாக எடுத்து பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பல்கலைக்கழகம் கோவை–3 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
இந்த தகவலை வேளாண் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி ரவிக்குமார் தியோடர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

## விலை அதிகரித்து உள்ளதால் விவசாயிகள் உருளைகிழங்கை சேமித்து வைக்காமல் விற்பனை செய்ய தோட்டக்கலை துறை அறிவுரை

ஊட்டி, ஜன.12–
நீலகிரி மாவட்ட உருளை கிழங்கின் தேவைப்பாடு அதிகரித்து உள்ளதாலும், தற்போது நல்ல விலை கிடைப்பதாலும் விவசாயிகள் அறுவடை செய்த உருளை கிழங்கினை சேமித்து வைக்காமல் உடனடியாக விற்பனை செய்ய வேண்டும் என்று மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் தேவராஜ் கூறி உள்ளார்.
முதல் 10 நாடுகள்
ஊட்டி தோட்டக்கலை இணை இயக்குனர் தேவராஜ் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–
உருளைக்கிழங்கு அதிக மகசூல் தரக்கூடிய குறுகிய கால பயிர் ஆகும். உலக மெங்கும் 150 நாடுகளில் உருளைக்கிழக்கு பயிரிடப் படுகிறது. பல கோடிக்கும் அதிகமான மக்கள் உருளைக் கிழங்கை உணவாக உட்கொள்கின்றனர்.
உருளைகிழங்கு உற்பத்தியில் முதல் 10 நாடுகளில் முறையே சீனா, ரஷ்யா, இந்தியா, அமெரிக்கா, உக்ரைன், போலந்து, ஜெர்மனி, நெதர்லாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. இந்தநாடுகள் மொத்த உருளைக்கிழங்கு உற்பத்தியில் 70 சதவீதம் பங்களிக்கின்றன.
3–வது இடம்
இந்தியா ஏறத்தாழ 7.5 சதவீதம் பங்களித்து உலக மொத்த உற்பத்தியில் 3–வது இடம் வகிக்கிறது. மேலும் கடந்த 20 ஆண்டுகளாக உற்பத்தியில் முதல் 10 இடங்களில்

இந்தியா இருந்து வருகிறது.உருளைக்கிழங்கு அதிகமாக உட்கொள்வதில் ஐரோப்பா முதலிடம் வகிக் கிறது. இதனை தொடர்ந்து வட அமெரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன.

இந்தியாவில் இருந்து இலங்கை, ஐக்கிய அரபு நாடுகள், மொரீஷியஸ், நேபாளம், சிங்கப்பூர், மாலத் தீவுகள் மற்றும் குவைத் உள்ளிட்ட நாடுகளுக்கு உருளைக்கிழங்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

80 சதவீத பங்களிப்பு

அறுவடை காலங்களில் விலை கடுமையாக வீழ்ச்சி அடைவதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்ற னர். இந்தியாவில் உத்திர பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங் களின் மொத்த உற்பத்தியில் 80 சதவீதம் பங்களிப்பு அளிக்கிறது.

தமிழ்நாட்டில் 2009–10–ல் உருளைக்கிழங்கு 4 ஆயிரத்து 800 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 80 ஆயிரத்து 600 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. பெரும் பாலும் திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அதிகமாக பயிரிடப்படு கிறது.

நல்ல விலை

தரம் மற்றும் சுவைக்கு சிறந்து விளங்குகின்ற நீலகிரி உருளைக்கிழங்கிற்கு 2009– 2010–ல் நல்ல விலை கிடைத்ததால் 2010 கரீப் பருவத்தில் விவசாயிகள் ஊக்கமுடன் பயிரிட்டனர்.

மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் இந்திய அளவில் சிறந்து விளங்குகின்ற ஒரு விற்பனை மையம் ஆகும். தற்போது மேட்டுப்பாளை யம் விற்பனை மையத்தில் 45 கிலோ கொண்ட ஒரு மூடை உருளைக்கிழஙகு ரூ.680 முதல் ரூ.730 வரை விற்பனை ஆகிறது.

தேவை அதிகரிப்பு

தற்போது கர்நாடக மாநிலத்தின் கரீப் பருவத்து வரத்து குறைவாக இருப்பதால் தொடர்ச்சியாக நீலகிரி உருளைக்கிழங்கு தேவை அதிகமாக இருந்து வருகிறது. இதனால் மேட்டுப்பாளை யம் சந்தையில் நல்ல விலை கிடைக்கிறது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் மேட்டுப் பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நிலவிய 20 ஆண்டு உருளைக் கிழங்கு விலைகளை ஆய்வு செய்ததில், டிசம்பர் 2010–ல் விவசாயிகளுக்கு 45 கிலோ கொண்ட மூடைக்கு ரூ.570 முதல் ரூ.640 வரை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

வருகிற பிப்ரவரி–மார்ச் மாதங்களில் விலை குறைய வாய்ப்புகள் அதிகம் உள்ளது. எனவே விவசாயிகள் அறு வடையான உருளைக் கிழங்கினை சேமித்து வைக்காமல் உடனடியாக விற்பனை செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## *பனியினால் மகசூல் குறைவு: பச்சை தேயிலைக்கு விலை உயர்வு ஏற்படுமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு*

*குன்னூர், ஜன.12–*

*பனியினால் தேயிலை மகசூல் குறைவு ஏற்பட்டு வருவதால் இனி வரும் காலங்களில் பச்சை தேயிலைக்கு விலை உயர்வு ஏற்படுமா? என்று விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.*

*நீலகிரி பொருளாதாரம்*

*நீலகிரி மாவட்டம் தேயிலை விவசாயம் சார்ந்த மாவட்ட மாக உள்ளது. இதன் காரண மாக தேயிலை விலையின் ஏற்ற இறக்கம் நீலகிரி மாவட்டத்தின் பொருளாதார நிலையை நிர்ணயிக்கிறது.*

*வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்கள் நடைபெறும் தேயிலை ஏலத்தில் விற்பனையாகும் தேயிலை தூளின் விலையை கொண்டு தேயிலை விவசாயிகள் வழங்கும் பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.*

*தேக்கம்*

*கடந்த 2010–ம் ஆண்டின் கடைசி 4 மாதத்தில் வெளி நாட்டு மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தில் மந்த நிலை நிலவியது. இதனால் தேயிலை தூளுக்கு கிராக்கி இல்லாத தால் தொடர்ந்து தேயிலை தூள் தேக்கம் அடைந்து வந்தது.*

*இதன் காரணமாக தேயிலை வர்த்தகத்தின் வருமானம் கணிசமாக குறைந்தது. கடந்த ஆண்டில் ஜூன், ஜூலை மாதத்தில் பச்சை தேயிலை தேயிலையின் மகசூல் வரலாறு காணாத வகையில் அதிகரித்து இருந்தது.*

*தேயிலை தூள் தேவை அதிகரிப்பு*

*தேயிலை தொழிற்சாலை கள் பச்சை தேயிலையை வாங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. அதன் பிறகு பச்சை தேயிலையின் மகசூல் கடந்த டிசம்பர் மாதம் வரை அதிகரிக்கவில்லை. பச்சை தேயிலை மகசூல் குறைவு காரணமாக தேயிலை விவசாயிகளுக்கும் வருமான குறைவு ஏற்பட்டது.*

*இந்த ஆண்டு தொடக்கத்தில் தேயிலை விற்பனையில் முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. கடந்த 6, 7 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இந்த ஆண்டின் முதல் ஏலத்தில் தேயிலை தூளுக்கு 3 ரூபாய் விலை உயர்வு ஏற்பட்டது. கடந்த ஆண்டின் டிசம்பர் மாத கடைசி வாரத்தில் தேயிலை தூள் ஏலம் இல்லாத காரணத்தால் வர்த்தகர்களுக்கு தேயிலை தூள் தேவை அதிகரித்தது.*

*உற்பத்தி குறைவு*

*வட இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள பனியின் காரணமாக தேயிலை தூள் உற்பத்தியும் குறைந்துள்ளது. இதனால் தென்னிந்திய தேயிலை தூளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது என்று தேயிலை வர்த்தகர்கள் வட் டாரத்தில் கூறப்படுகிறது.*

*இந்த ஆண்டின் முதல் வாரத்தில் தேயிலை தூள் விலையேற்றத்தின் காரணமாக கடந்த 8–ந் தேதி சனிக்கிழமை பச்சை தேயிலைக்கு வார விலையாக 'ஏ' பிரிவுக்கு 17 ரூபாயும், 'பி பிளஸ்' பச்சை தேயிலைக்கு 13 ரூபாய் என்றும், சாதாரண வகை பச்சை தேயிலைக்கு ரூ.10 மற்றும் ரூ.11 என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டது.*

*விவசாயிகள் எதிர்பார்ப்பு*

*ஆண்டு தொடக்கத்தில் தேயிலைக்கு விலை உயர்வு என்ற நல்ல சகுணம் தெரிவ தால்,*

இந்த விலை உயர்வு இந்த ஆண்டு முழுவதும் தொடர வேண்டும் என்பது சிறு தேயிலை விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.
தற்போது பனி காலமாக இருப்பதால், தேயிலை மகசூலும் குறைவடைந்து வருகிறது. இதன் காரணமாக பச்சை தேயிலைக்கு எதிர் வரும் வாரங்களில் விலை உயர்வு ஏற்படும் என்று சிறு விவசாயிகள் கூறுகின்றனர்.

## கூடலூர் பகுதியில் போதிய விலை கிடைப்பதால் 'களை' கட்டும் நேந்திர வாழை விவசாயம்



கூடலூர் பகுதியில் நேந்திர வாழை விவசாயம் செய்யப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

கூடலூர், ஜன.12–
கூடலூர் பகுதியில் நிரந்தரமாக போதிய விலை கிடைப்பதால் கூடலூர் விவசாயிகள் நேந்திர வாழை விவசா யத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். இதனால் ஏக்கர் கணக்கில் நேந்திர வாழை விவசாயம் நடைபெற்று வருகிறது.
விவசாய பூமியான கூடலூர்
நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் தேயிலை, காபி, குறுமிளகு உள்ளிட்ட பயிர் களும், மலைப்பிரதேச பகுதி யில் விளையும் காய்கறிகளான முட்டைகோஸ், கேரட், காலிபிளவர், உருளைக்கிழங்கு எனவிளைவிக்கப்படுகின்றன. கூடலூர் பகுதியில் அனைத்து வகையான காய்கறிகளும் விளைவிக்கப்படுகின்றன. குறிப்பாக ஓவேலி பகுதியில் கிராம்பு, ஏலக்காய், குறுமிளகு, காபி என பணப்பயிர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விளைகின்றன. ஆனால் கூடலூர், மண்வயல், தொரப் பள்ளி, பாடந்தொரை, தேவர் சோலை ஆகிய பகுதிகளில் வாழை, பாகற்காய், கத்தரிக் காய், வாழை, பூசணிக்காய் என காய்கறிகள் விளை விக்கப்படுகின்றன. தற்போது நேந்திர வாழை விவசாயம் களை கட்டியுள்ளது.
போதிய விலை கிடைப்பதால் வாழை
பாடந்தொரை, தேவர் சோலை, 3–வது டிவிசன் உள்ளிட்ட பகுதிகளில் ஏக்கர் கணக்கில் நேந்திர வாழை விவசாயம் நடைபெற்று வரு கின்றன. ஒரு கிலோ நேந்திரங்

காய்க்கு ரூ.13.50க்கு விலை கிடைத்து வருகிறது. விவசாயி களிடம் பெறும் நேந்திர வாழைக் காய்களை வியாபாரிகள் கிலோவுக்கு 26 வரை விற்று நல்ல லாபம் பெறுகின்றனர். தேயிலை விலையை விட நேந்திர வாழைக்கு எப்போதுமே கணிசமான விலை கிடைத்து வருவதால் கூடலூர் விவசாயிகள் நேந்திர வாழை விவசாயம் மீது முழு நம்பிக்கை வைத்து வருகின்றனர்.